**சாட்சிகளின் வாக்குமூலம்**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 42/2021**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**வாக்குமூலம் – வா.சா–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | ராமசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் முதல் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 23.04.1981 தேதியிட்ட ராமசாமி கவுண்டர் வகையராக்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகசானப்பத்திரம் சான்றிட்ட நகல்

2. 08.07.1987 தேதியிட்ட குமாரசாமி கவுண்டர் பெயரில் உள்ள கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல்

3. 07.09.2001 தேதியிட்ட ஜோதிமணி பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

4. 11.02.2014 தேதியிட்ட ஜோதிமணி மற்றும் முத்துலட்சுமி வகையராக்கள் ஏற்படுத்திக் கொண்ட பரிவர்த்தனை பத்திரம்

5. 29.01.2016 தேதியிட்ட எங்கள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்

6. கணிணி பட்டா பதிவிறக்க நகல்

7. 02.03.2021 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு

8. 11.03.2021 தேதியிட்ட நாங்கள் கொடுத்த பதில் அறிவிப்பு

9. 16.03.2021 தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.08.08 18:13:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.